உ

முருகன் துணை.

குருபாததாசர் அவர்களால் செய்தருளிய

திருப்புல்வயல்

# குமரேசசதகம்.

இது

மதுரைத் தமிழ்ச்சங்கத்து வித்துவானாகிய

சித்தாந்தசரபம் அஷ்டாவதானம்

பூவை கலியாணசுந்தர முதலியாரவர்கள்

பார்வையிட்டது

ம. திருவேங்கிடமுதலியாரால்

சென்னை

ஸ்ரீ மாதவவிலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது

1,908.

உ

கடவுள் துணை.

---

## புதிதாய் அச்சிட்ட புஸ்தக

# விளம்பரம்.

| | |
|---|---|
| ஜாதக சித்தி யென்னும் அனுபோக சோதிடப்ரம்ம ரஹஸ்யம் | 0-12-0 |
| இலக்ஷ்மணா தேவி நாடகம் | 0—4—0 |
| பார்ஸி சேல்படாமோஹனராணி சரித்திரம் | 0—4—0 |
| நாலாயிரப்ரபந்தம் சுத்தப்ரதி | 2—0—0 |
| ஷை வடகலை | 2—0—0 |
| பெரிய ஞானக் கோர்வை | 0—8—0 |
| ஷை இரண்டாவது | 0—8—0 |
| ஷை இரண்டும் சேர்த்து | 1—0—0 |

இன்னும் வேண்டிய புஸ்தகங்களும் தயாரா இருக்கின்றது எமது கேட்லாக் வேண்டுவோர் அரையணா லேபி லனுப்பினால் வுடனே அனுப்பப்படும்.

இப்படிக்கு,

ம- திருவேங்கட முதலியார்

தாண்டவராயப் பிள்ளைத் தெருவு 11-வது நெ.

சௌகார் பேட் போஸ்ட்,

மதரூஸ்.

---

உ

சிவமயம்.

# குமரேசசதகம்.

## காப்பு.

பூமேவு புல்லைப் பொருந்துகும ரேசர்தம்மேல்
தேமே வியசதகஞ் செப்பவே-கோமேவிக்
காக்குஞ் சரவணத்தான் கம்பகும்பத் தைந்துகரக்
காக்குஞ் சரவணத்தான் காப்பு.

---

## அவையடக்கம்.

மாரிக்கு நிகரென்று பனிசொரிதல் போலவு
மனைக்குநிக ரென்று சிறுபெண்
மணல்வீடு கட்டுவது போலவுஞ் சந்திரன்முன்
மருவுமின் மினிபோ லவும்
பாருக்கு ணல்லோர்மு னேபித்தர் பலமொழி
பகர்ந்திடுஞ் செயல் போலவும்
பச்சைமயி லாடுதற் கிணையென்று வான்கோழி
பாரிலா டுதல் போலவும்
பூரிக்கு மினியகா வேரிக்கு நிகரென்று
போதுவாய்க் கால் போலவும்
புகல்சிப்பி முத்துக்கு நிகராப் பளிங்கைப்
பொருந்த வைத்தது போலவும்
வாரிக்கு முன்வாவி பெருகல்போ லவுமின்சொல்
வாணர்மு னுகந்து புல்லை
வீரலாகும ரேசர்மேற் சதகம் புகன்றனன்
மனம்பொறுத் தருள் புரிவையே

---

## நூல்.

### குமரேசர் மகிமை.

பூமிக்கொ ராறுதலை யாய்வந்து சரவணப்
பொய்கைதனில் விளையாடி யும்
புனிதர்க்கு மந்த்ரவுப தேசமொழி சொல்லியும்
போதனைச் சிறையில் வைத்தும்
தேமிக்க வரிகரப் பிரமாதி கட்குஞ்
செருக்கமுடி யாவ சுரனைத்
தேகங்கிழித்துவடி வேவினொ லிருகூறு
செய்தமரர் சிறைத விர்த்தும்
நேமிக்கு ளன்பரிட ருற்றசம யந்தனி
னினைக்குமுன் வந்து தவியும்
நிதமுமெய்த் துணையாய் விளங்கலா லுலகிலுனை
நிகரான தெய்வ முண்டோ
மாமிக்க தேன்பருகு பூங்கடம் பணியுமணி
மார்பனே வள்ளி கணவா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (1)

### அந்தண ரியல்பு.

குறையாத காயத்ரி யாதிசெப மகிமையுங்
கூறுசுரு திப் பெருமையுங்
கோதிலா வாகமபு ராணத்தின் வளமையுங்
குலவுயா காதி பலவும்
முறையா நடத்தலாற் சகலதீ வினைகளையு
முளரி *பேர் லேதகிப் பார்
முதன்மைபெறு சிலைசெம்பு பிருதுவிகளிற்றெய்வ
மூர்த்தமுண் டாக்குவிப் பார்
நிறையாக நீதிநெறி வழுவார்க ளாகையா
னீண்மழை பொழிந்திடுவதும்

* முளரி-அக்கினி.



நிலமதுசெழிப்பது மாசர்செங் கோல்புரியு
நிலையுமா தவர்செய் தவமும்
மறையோர்க ளாலே விளங்குமிவ் வுலகத்தின்
மானிடத் தெய்வ மிவர்காண்
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (2)

### அரச ரியல்பு.

குடிபடையி லபிமான மந்திரா லோசனை
குறிப்பறிதல் சத்ய வசனங்
கொடைநித்த மவரவர்க் கேற்றமரியாதைபொறை
கோடாத சதுரு பாயம்
படிவிசா ரணையொடு ப்ரதானிகள் கர்த்தரைப்
பண்பறிந் தேய மைத்தல்
பல்லுயிரெ லாந்தன் னுயிர்க்குநிக ரென்றே
பரித்தல்குற் றங்கள் களைதல்
துடிபெறு தனக்குறுதி யானநட் பகமின்மை
சகுணமொடு கல்வி யறிவு
தோலாத காலமிட மறிதல்வினை வலிகண்டு
துஷ்டநிக் ரக சௌரியம்
வ . வுபெறு செங்கோ னடத்திவரு மரசர்க்கு
வழுவாத முறைமை யிதுகாண்
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (3)

### வணிக ரியல்பு.

ெ ாண்டபடி போலும்விலை பேசிலா பஞ்சிறிது
கூடிவர நய முரைப்பார்
கொள்ளுமொரு முதலுக்கு மோசம்வா ராதபடி
குறுகவே செலவு செய்வார்

வண்டப் புரட்டர்தா முறிதந்து பொன்னடகு
　　வைக்கினுங் கடனீந்தி டார்
மருவுநா ணயமுளோர் கேட்டனுப் புகினுமவர்
　　வார்த்தையிலெ லாங்கொ டுப்பார்
கண்டெழுது பற்றுவர வினின்மயிர் பிளந்தே
　　கணக்கிலணு வாகிலும் விடார்
காசுவீ ணிற்செலவி டாருசித மானதிற்
　　கனதிரவி யங்கள் விடுவார்
மண்டலத் தாடுகன வர்த்தகஞ் செய்கின்ற
　　வணிகர்க்கு முறைமை யிதுகாண்
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
　　மலைமேவு குமரேசனே. (4)

### வேளாள ரியல்பு.

நல்லதே வாலயம் பூசனை நடப்பது
　　நாடோறு மழைபொழிவ தும்
நாடியத போதனர்கண் மாதவம் புரிவது
　　நவில்வேத வேதிய ரெலாம்
சொல்லரிய யாகாதி கருமங்கள் செய்வதுந்
　　தொல்புவி செழிக்கு நலமுஞ்
சுபசோ பனங்களுங் கொற்றவர்கள் செங்கோ
　　லுலங்குமனு நெறி முறைமையும்
வெல்லரிய சுகிர்தமொடு வர்த்தகன் கொள்விலையும்
　　விற்பனையு மதிக புகழும்
மிக்கவதி காரமுந் தொழிலாளர் சீவனமும்
　　வீரரண சூர வலியும்
வல்லமைகள் சகலமும் வேளாளர் மேழியின்
　　வாழ்வினன் விளைவ தன்றோ
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
　　மலைமேவு குமரேசனே. (5)



### பிதாக்கள்.

தவமதுசெய் தேபெற் றெடுத்தவன் முதற்பிதா
　　தனைவளர்த் தவனொரு பிதா
தயையாக வித்தையைச் சாற்றினவ னொருபிதா
　　சார்ந்தசற் குருவொரு பிதா
அவமறுத் தாள்கின்ற வரனொரு பிதாநல்ல
　　வாபத்து வேளை தன்னி
லஞ்சலென் றுற்றதுயர் தீர்த்துளோ னொருபிதா
　　வன்புளமு னோ * னொருபிதா
கவளமிடு மனைவியைப் பெற்றுளோ னொருபிதா
　　கலிதவிர்த் தவனொரு பிதா
காசினியி லிவரைநித் தம்பிதா வென்றுளங்
　　கருதுவது நீதி யாகும்
மவுலிதனின் மதியரவு புனைவிமல ருதவுசிறு
　　மதலையென வருகுரு பரா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
　　மலைமேவு குமரேசனே. (6)

### ஒன்றை யொன்று பற்றியிருப்பன.

சத்தியந் தவறு திருப்பவ ரிடத்தினிற்
　　சார்ந்துதிரு மாதிருக் குஞ்
சந்ததந் திருமா திருக்கும் விடந்தனிற்
　　றனதுபாக் கியமிருக் கும்
மெய்த்துவரு பாக்கிய மிருக்கும் விடந்தனில்
　　விண்டுவின் கலையிருக் கும்
விண்டுவின் கலைபூண் டிருக்கும் விடந்தனின்
　　மிக்கான தயையிருக் கும
பத்தியுட னினியதயை யுள்ளவரி டந்தனிற்
　　பகர்தரும மிகவிருக் கும்
பகர்தரும முள்ளவ ரிடந்தனிற் சத்துரு
　　பலாயனத் திறலிருக் கும்

---

* முனோன் - சமையன்.

ணைவத்திசை மிகுந்ததிற லுள்ளவ ரிடத்தில்வெகு
மன்னுயிர் சிறக்கு மன்றே
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (7)

இவர்க்கிவர் தெய்வமெனல்.

ஆதுலர்க் கன்னங் கொடுத்தவர்க ளேதெய்வ
மன்பான மாணுக் கருக்
கரியகுரு வேதெய்வ மஞ்சினோர்க் காபத்
தகற்றினோ னேதெய்வ மாம்
காதலுறு கற்புடைய மங்கையர் தமக்கெலாங்
கணவனே மிக்க தெய்வங்
காசினியின் மன்னுயிர் தமக்கெலாங் குடிமரபு
காக்குமன் னவர்தெய்வ மாம்
ஓதரிய பிள்ளைகட் கன்னைதந் தையர்தெய்வ
மூவர்சாதி மாந்தர் யார்க்கு
முறவின்முறை யார்தெய்வம்விசுவாசமுள்ளபேர்க்
குற்றசிவ பத்தர் தெய்வம்
மாதயையி னுற்சூத் திரர்க்குமறை யோர்தெய்வம்
வானவர்க் குத்தெய்வ நீ
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (8)

இவர்க்கிதுநினைவெனல்.

ஞானநெறி யாளர்க்கு மோக்ஷத்தி லேநினைவு
நல்லறிவு ளோர் தமக்கு
நாடொறுந் தருமத்தி லேநினைவு மன்னர்க்கு
ராச்சியந் தன்னி னினைவு
ஆனகா முகருக்கு மாதர்மே லேநினைவு
வஞ்சாத திருடருக் கிவ்
சனுதினங் களவிலே நினைவுதன வணிகருக்
காதாய மீது நினைவு



தானமிகு குடியாள ருக்கெலாம் வேளாண்மை
தனினினைவு கற்ப வர்கருத்
தகுகல்வி மேனினைவு வேசியர்க் கினியபொரு
டருவோர்கண் மீது நினைவு
மானபர னுக்குமரி யாதைமே னினைவெற்கு
மாறுதுன் மீது நினைவு
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (9)

இவர்க்கிது வில்லை யெனல்.

வேசைக்கு நிசமில்லை திருட னுக் குறவில்லை
வேந்தர்க்கு நன்றி யில்லை
மிடியற்கு விலைமாதர் மீதுவங் கணமில்லை
மிலேச்சர்க்கு நிறைய தில்லை
ஆசைக்கு வெட்கமிலை ஞானியா னவனுக்கு
ளகமில்லை மூர்க்கன் றனக்
கன்பில்லை காமிக்கு முறையில்லை குணமிலோர்க்
கழகிலலை சித்த சுத்தன்
பூசைக்கு நவிலங்க சுத்தியிலை யாவுமுணர்
புலவனுக் கயலோ ரிலை
புல்லனுக் கென் றுமுசி தானுசித மில்லைவரு
புலையர்க் கிரக்க மில்லை
மாசைத் தவிர்ந்தமதி முகதெய்வ யானையொடு
வள்ளிக் கிசைந்த வழகா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (10)

இப்படிப்பட்டவ ரிவரெனல்.

நியாயநெறி தவறும லுலகபரி பாலன
நடத்துமவ னேயரச னும்
ராசயோசனைதெரிந் துறுதியா கியசெய்தி
நவிலுமவ னேமந்திரி

நேயமுடனேதன் சரீரத்தை யெண்ணாத
  சிர்வாகி யேசூர னும்
நிலைபெறு மிலக்கண மிலக்கிய மறிந்துசொலு
  நிபுணகவி யேகவிஞ னும்
ஆபத்தொரு வாகடந் தாதுவினி தானமு
  மறிபுமுதி யோன் வைத்திய
னசமின்றி மெய்யுணர்ந் தைம்புல னொழித்துவிட்
  டவனேமெய்ஞ் ஞானியெனலாம்
மாயவர் சகோதரி மனோன்மணிக் கன்பான
  வரபுத்ர வடிவேல வா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
  மலைமேவு குமரேசனே. (11)

### விரைந்தடக்கத் தகுவன விவையெனல்.

அக்கினியை வாய்மூந்து துர்ச்சனரை வஞ்சமனை
  யாளைவளர் பயிர்கொள் களையை
யஞ்சா விரோதிகளை யனியாய முடையோரை
  யகீர்த்தியைப் பெண்க ளார்ப்பைக்
கைக்கினிய தொழிலாளியைக்கொண்டவடிமையைக்
  களவுசெய் யுந் திருடரைக்
கருதிய விசாரத்தை யடக்கமில் பாலியைக்
  கடிதான கோபந் தனை
மெய்க்கினித லாப்பிணியை யவையுதாசீனத்தை
  வினைமூண்டி டுஞ் சண்டையை
விஷமேறு கோரத்தை யன்றடக்குவதலான்
  மிஞ்சவிட லாகாது காண்
மைக்கினிய கண்ணிகுற வள்ளிதெய் வானையை
  மணஞ்செய்த பேரழகனே
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
  மலைமேவு குமரேசனே. (12)



### இவர்க்கிது துரும்பெனல்

தாராள மாகக் கொடுக்குந் தியாகிக
  டமக்குநற் பொரு டுரும்பு
தன்னுயிரை யெண்ணாத சூரனுக்கெதிராளி
  தலைமெலா மொரு துரும்பு
பேரான பெரியருக் கற்பரது கையினிற்
  பிரயோசனந் துரும்பு
பெரிதான மோக்ஷநந் தனையுள் ளவர்க்கெலாம்
  பெண்போக மொரு துரும்பு
தீராதசகலமும் வெறுத்ததுற விக்குவிறல்
  சேர்வேந்த னொரு துரும்பு
செய்பகலை நாமகள் கடாக்ஷமுள் ளோர்க்கெலாஞ்
  செந்தமிழ்க் கவி துரும்பாம்
வாராரு மணிகொண்முலை வள்ளிதெய் வானையை
  மணம்புணரும் வடிவேலவா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
  மலைமேவு குமரேசனே. (13)

### இதனை விளக்குவ திதுவெனல்.

பகல்விளக் குவதிரவி நிசிவிளக் குவதுமதி
  பார்விளக் குவது மேகம்
பதிவிளக் குவதுபெண் குடிவிளக் குவதரசு
  பரிவிளக் குவது வேகம்
இகல்விளக் குவதுவலி நிறைவிளக் குவதுநல
  மிசைவிளக் குவது சுதியு
மிடம்விளக் குவதுகுடி யுடல்விளக் குவதுமடி
  யினியசொல் விளக்குவ தருள்
புகல்விளக் குவதுகொடை தவம்விளக் குவதறிவு
  பூவிளக் குவது வாசம்
பொருள்விளக் குவதுதிரு முகம்விளக்குவதுநகை
  வித்தியை விளக்குவது நூல்

மகம்விளக் குவது மறை சொல்விளக் குவதுங்சம்
வாவியை விளக்குவது நீர்
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (14)

பிறப்பிட நன்மையால் தன்மை பெருமை

சிங்கார வனமதி லுதிப்பினுங் காகமது
தீஞ்சொல்புகல் குயிலாகுமோ
திரையெறியும் வாவியிற் பூத்தாலு மேகொட்டி
செங்கஞ்ச மலராகுமோ
அங்கான கத்திற் பிறந்தாலு முயலான
தானையின் கன்றாகுமோ
வாண்மையா கியநல்ல குடியிற் பிறந்தாலு
மசடர்பெரி யோராவரோ
சங்காடு பாற்கடல் பிறந்தாலு நத்தைதான்
சாலக்கி ராம மாமோ
சுடபேவு கடனீரி லேயுப்பு விளையினுஞ்
சாரசர்க் கரையாகுமோ
மங்காத செந்தமிழ்க் குறுமுனிக் குபதேசம்
வைத்தமெய்ஞ் ஞான குருவே
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (15)

பலர்க்கும் பயன்படுவன.

கொண்டல்பொழி மாரியு முதாரசற் குணமுடைய
கோவுமரு ளுணியி னீருங்
கூட்டமிடு மம்பலத் துறுதருவி னீழலுங்
குடியாளர் விவசாயமும்
கண்டவர்க ளெல்லாம் வரும்பெருஞ் சந்தியிற்
கனிபல பழுத்த மாமும்
கருணையுட னேவைத் திடுந்தணீர்ப்பந்தலுங்
காவேரி போலூற்ற மும்



விண்டலத் துறைசந்தி ராதித்த கிரணமும்
வீசுமா ருத சீதமும்
விவேகியெனு நல்லோ ரிடத்திலுறு செல்வமும்
வெகுசனர்க் குபகார மாம்
வண்டிமிர் கடப்பமலர் மாலையணி செங்களப
மார்பனே வடிவேல வா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (16)

தாமழியினுங் குணமழியாதவை.

தங்கமா னதுதழலி லின்றுருகி மறுகினுந்
தன்னொளி மழுங்கி டாது
சந்தனக் குறடுதான் மெலிந்து தேய்ந் தாலுமோ
கன்மணங் குன்றி டாது
பொங்கமிகு சங்குசெந் தழலில் வெந்தாலுமோ
பொசிவெண்மை குறைவுறாது
போதவே காய்ந்துநன் பால்குறுகி னாலும்
பொருந்து சுவை போய் விடாது
துங்கமணி சாணையிற் றேய்ந்து விட்டாலுந்
துலங்குகுண மொளியாது பின்
றொன்மைதரு பெரியோர் மடிந்தாலு மவர்களது
தூயசிறை தவறுமோ
மங்களகல் யாணிகுற மங்கைசுர குஞ்சரியை
மருவுதிண் புயவாசனே
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (17)

நரகில் வீழ்வோர்.

மன்னரைச் சமரில்விட் டோடினவர் குருமொழி
மறந்தவர் கொலைப் பாதகர்
மங்கையர் வைங்கித் தித்தவர்கள் பரதார
மருவித் திரிந்த பேர்கள்

அன்னங் கொடுத்தபே ருக்கழிவை யெண்ணினோ
ரரசடக் கியவமைச்ச
ராலய மிகழ்ந்தவர்கள் விசுவாச காதக
ரருந்தவர் தமைப்பழித் தோர்
முன்னுதவி யாய்ச்செய்த நன்றியை மறந்தவர்
முகஸ்துதி வழக் குரைப்போர்
முற்றுசிவ பத்தரை நடுங்கச் சினத்தவர்கண்
முழுதும்பொ யுரைசொல்லு வோர்
மன்னொருவர் வைத்தபொரு ளபகரித் தோரிவர்கண்
மாநகரில் வீழ்வ ரன்றோ
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (18)

சரீரசுகம்.

மாதத் திரண்டுவிசை மாதரைப் புல்குவது
மறுவறுவி ரேசனந்தான்
வருஷத் திரண்டுவிசை தைலந் தலைக்கிடுதல்
வாரத் திரண்டு விசையாம்
மூதறிவி னொடுதனது வயதினுக் கிளையவொரு
மொய்குழ லுடன் சையோகம்
முற்றுதயிர் காய்ச்சுபா லீர்மோ ருருக்குநெய்
முதிரா வழுக்கை யிளநீர்
சாதத்தி லெவையளவா னாலும் புசித்தபின்
குறுந் தனக்கு வாங்கல்
தயையாக வுண்டபி னுலாவலிவை மேலவர்
சரீரசுக மாமென்பர் காண்
மாதவரு மாரிசா ரங்கத் துதித்தகுற
வள்ளிக் குகந்த சரசா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (19)



யார்க்கு மனுபோகம் விடாமை.

தேசுபெறு மேருப்ர தக்ஷிணஞ் செய்துமதி
தேகவடு நீங்க வில்லை
திருமா லுறங்கிடுஞ் சேடனுக் குவணன்
செறுப்பகை யொழிந்த தில்லை
ஈசன் கழுத்திலுறு பாம்பினுக் கிரைவே
றிலாமலேவாயு வாகு
மினியகண் ணாகிவரு பரிதியா னவனுக்கி
ராகுவோ கனவி ரோதி
ஆசிலாப் பெரியோரிடத்தினி லடுக்கினு
மமைத்தபடி யன்றி வருமோ
வவரவர்க் ளனுபோக மனுபவித் திடல்வேண்டு
மல்லால் வெறுப்ப தெவரை
வாசவனு மும்பர னைவரும்விசய சயவென்று
வந்துதொழு தேத்து சரணா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (20)

இதுவின்றிஇதுசிறவா தெனல்.

குருவிலா வித்தைகூ றறிவிலா வாணிபங்
குணமிலா மனைவி யாசை
குடிநல மிலாநாடு நீதியில்லா வரசு
குஞ்சரமி லாத வெம்போர்
திருவிலா மெய்த்திறமை பொறையிலா மாதவந்
தியானமில் லாத நிஷ்டை
தீபமில் லாதமனை சோதரமி லாதவுடல்
சேகரமி லாத சென்னி
உருவிலா மெய்வளமை பசியிலா வுண்டிபுக
ழுண்மையில் லாத வசனம்
போசனையி லாமந்த்ரி தைரியமி லாவீர
முதவியில் லாத நட்பு

பருவிலா வண்ணமலர் பெரியோ ரிலாதசபை
　　வையத் திருந்தென் பயன்
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
　　மலைமேவு குமரேசனே. (21)

பகைக்கப்படாதவ ரிவரெனல்.

அரசர்பகை யுந்தவம் புரிதபோ தனர்பகையு
　　மரியகரு ணீகர் பகையு
மடுத்துக் கெடுப்போர் கொடும்பகையு முட்பகையு
　　மருளிலாக் கொலைஞர் பகையும்
விரகுமிகு மூரிலுள் ளோருடன் பகையு மிகு
　　விகடப்ர சங்கி பகையும்
வெகுசனப் பகையுமந் திரவாதி யின்பகையும்
　　விழைமருத் துவர்கள் பகையும்
உரமருவு கவிவாணர் பகையுமா சான்பகையு
　　முறவின்முறை யார்கள் பகையு
முற்றதிர வியமுளோர் பகையுமந் திரிபகையு
　　மொருசிறிது மாகாது காண்
வரநதியின் மதலையென வினியரச வணமிசையில்
　　வருதருண சிறு குழவியே
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
　　மலைமேவு குமரேசனே. (22)

பேயெனப்படுவோ ரிவரெனல்.

கடனுதவு பேர்வந்து கேட்கும்வே ளையின்முகங்
　　கடுகடுக் கின்ற பேயும்
கனமருவு பெரியதனம் வந்தவுட னிறுமாந்து
　　கண்விழிக் காத பேயும்
அடைவுடன் சத்துருவின் பேச்சை விசுவாசித்
　　தகப்பட்டு ழன்ற பேயு
மாசைமனை யாளுக்கு நேசமா யுண்மைமொழி
　　யானதை யுரைத்த பேயும்



இடரிலா நல்லோர்கள் பெரியோர்களைச் சற்று
　　மெண்ணா துரைத்த பேயு
மினியபரி தானத்தி லாசைகொண் டொருவர்க்
　　கிடுக்கண் செய்திட்ட பேயும்
மடமனை யிருக்கப் பரத்தையைப் புணர்பேயும்
　　வசைபெற்ற பேய்களன்றோ
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
　　மலைமேவு குமரேசனே. (23)

அவ்வவ்வனத்தி லுயர்ந்தவை.

தாருவிற் சந்தான நதியினிற் கங்கைவிர
　　தத்தினிற் சோம வாரந்
தகைபெறு நிலத்தினிற் காஸ்மீர கண்டந்
　　தலத்திற் சிதம்பர தலம்
சீருலவு ரிஷிகளில் வசிட்டர்பசு விற்காம
　　தேனுமுனி வரினா ரதன்
செல்வ நவமணிகளிற் றிகழ்பதும ராகமணி
　　தேமலரி லம்போ ருகம் ※
பேருலவு கற்பினி லருந்ததி கதித்திடு
　　பெலத்தின் மாருதம் யானையிற்
பேசிலை ராவதந் தமிழினி லகத்தியம்
　　பிரணவம் மந்திரத் தில்
வாரிதியி லேதிருப் பாற்கடல் குவட்டினின்
　　மகாமேரு வாகு மன்றோ
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
　　மலைமேவு குமரேசனே. (24)

அவரவர்க்குப் பெலமாவன.

அந்தணர்க் குயர்வேத மேபெலங் கொற்றவர்க்
　　கரியசெள ரியமே பெல
மானவணி கர்க்குநிதி யேபெலஞ் சூத்திரர்க்
　　காயினே ருழவே பெலம்

---

※ அம்போருகம் - தாமரை.

மந்திரிக் குச்சதுரு பாயமே பெலநீதி
மானுக்கு நடுவே பெலம்
மாதவர்க் குத்தவசு பெலமட வியர்க்குநிறை
மானமிகு கற்பே பெலம்
தந்திர மிகுத்தகன சேவகர் தமக்கெலாஞ்
சாமிகா ரியமே பெலஞ்
சான்றவர்க் குப்பொறுமை யேபெலம் புலவோர்
தமக்கு நிறை கல்வி பெலமாம்
வந்தனை செயுப்பூசை செய்பவர்க் கன்புபெலம்
வாலவடி வான வேலா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (25)

இருந்தும் பயன்படாதவை.

கருணைத்தி லுதவிசெய் யர்தநட் பாளாயின்
றந்தென தராம லென்ன
தராதர மறிந்துமுறை செய்யாத மன்னரைச்
சார்ந்தென்ன நீங்கி லென்ன
பெருமையுட னுண்மையில் லாதவொரு பிள்ளையைப்
பெற்றென பெறும லென்ன
பிரியமா யுள்ளன்பி லாதவர்க ணேசம்
பிடித்தெனவி டுக்கி லென்ன
தெருளாக மானமில் லாததொரு சீவனஞ்
செய்தென செயாம லென்ன
தேகியென வருபவர்க் கீயாத செல்வஞ்
சிறந்தென முறிந்து மென்ன
மருவிளமை தன்னிலில் லாதகன் னிகைபின்பு
வநதெனவ ராம லென்ன
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (26)



உபகாரமில்லாதவை.

கடனீர் மிருந்தென்ன வோதிதான்பெருத்தென்ன
காட்டிலவு மலரி லென்ன
கருவேல் பழுத்தென்ன நாய்ப்பால் சுரந்தென்ன
கானின்மழை பெய்து மென்ன
அடர்கழுதை லத்தி * நில மெல்லாங் குவிந்தென்ன
வரியகுண மில்லாத பெண்
ணழகா யிருந்தென்ன வாஸ்தான கோழை † பல
வரியநூ லோதி யென்ன
திடமினிய பூதம்வெகு பொன்காத் திருந்தென்ன
திறன்மிகுங் கரடி மயிர்தான்
செறிவாகி நீண்டென்ன வஸத்ராபூ ஷணமெலாஞ்
சித்திரத் தற்று மென்ன
மடமிகுந் தெவருக்கு முபகார மில்லாத
வம்பர்வாழ் வுக்கு நிகராம்
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (27)

பதரெனப்படுவோர்,

தன்பெருமை சொல்லியே தன்னைப் புகழ்ந்தபதர்
சமர்கண் டொளிக்கும் பதர்
தக்கபெரி யோர்புத்தி கேளாத பதர்தோழர்
தமமொடு சலிக்கும் பதர்
பின்புகா ணுவிடந் தன்னிலே புறணிபல
பேசிக் களிக்கும் பதர்
பெற்றதாய் தந்தைதுயர் படவாழ்ந் திருந்தபதர்
பெண்புத்தி கேட்கும பதர்
பொன்பண மிருக்கவே போயிரக் கின்றபதர்
பொய்சாட்சி சொல்லும் பதர்
புவியோர் நடத்தையை யிகழ்ந்தபதர் தன்மனைவி
புணர்தல்வெளி யாக்கும பதர்

* லத்தி-சாணம். † ஆஸ்தான கோழை - அச்சமுறு சமஸ்தான வித்துவான்கள்.

மன்புணரும் வேசையுடன் விபசரிக் கின்றபதர்
மனிதரிற் பதரென்பர் காண்
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (28)

காணவிடிற் றுபரப்படுமவை.

இரவிகா ணு * வனச மாரிகா ணுதபயி
ரிந்துகா ணுக குமுத
மேந்தல்கா ணுநாடு கரைகள் காணுவோட
மின்சொலகா ணுவி ருந்து
சுரபிகா ணுகன் றன்னைகா ணுமதலை
சோலைகா ணுத வண்டு
தோழற்கா ணுநேயர் கலைகள்கா ணுதமான்
சோடு † கா ணுத பேடு
குரவர்கா ணுசபை தியாகிகா ணுவறிஞர்
கொழுநர்கா ணுத பெண்கள்
கொண்டல்கா ணுதமயில் சிறுவர்காணுவாழ்வு
கோடைகா ணுக குயில்கள்
வரவுவா ணுதசெல விவையெலாம் புவிமீதில்
வாழ்வுகா ணுவிளமை யாம்
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (29)

வியாதி மூலங்கள்.

கல்லினுன் மயிரினுன் மீதூண் விரும்பலாற்
சுருங்கிய விசாரத்தி னற்
கடுவழி நடக்கையான் மலசல மடக்கையாற்
கனிபழங் கறியுண்ண லால்
நெல்லினு லுமியினு லுண்டபின் மூழ்கலா
னித்திரைக ளில்லாமை யா
னீர்ப்பகையி னற்பனிக் காற்றினி லுலாவலா
னீடுசரு கிலையூற லால்

* வனசம் - தாமரை. † சோடு - துணை.



மெல்லிநல் லார்கல்வி யதிகமுன் விரும்பலால்
வீழ்மலஞ் சிக்குகையி னன்
மிருசுமை யெடுத்தலா லிளவெயிற் * காய்தலாள்
மெய்வாட வேலை செயலால்
வல்லிரவி லேதயிர்கள் சுருகாதி † யுண்ணலால்
வன்பிணிக் கிடமென்பர் காண்
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (30)

செத்துஞ் சாகாதவர்.

அனைவர்க்கு முபகார மாம்வாவி கூவமுண்
டாக்கினோர் நீதி மன்ன
ரறியாத தேவாலயங் கட்டி வைத்துளோ
ரகாரங்கள் ‡ செய்த பெரியோர்
தனையொப்பி லாப்புதல்வ னைப்பெற்ற பேர்பொருது
சமர்வென்ற சுத்த வீரர்
தரணிதனி னிலைநிற்க வெந்நாளு மாறாத
தருமங்கள் செய்த பேர்கள்
கனவித்தை கொண்டவர்க ளோயாதகொடையாளர்
காவியஞ் செய்த கவிஞர்
கற்பினின் மிகுத்தவொரு பத்தினி மடந்தையைக்
கடிமணஞ் செய்தோர்க ளிம்
மனிதர்கள் சரீரங்கள் போகினுஞ் சாகாத
மனிதரிவ ராகு மன்றே
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (31)

சாகாதிருந்துஞ்செத்தவர்.

மாறாதவறுமையோர் தீராத பிணியாளர்
வருவேட் டகத்தி லுண்போர்
மனைவியை வழங்கியே சீவனஞ் செய்குவோர்
மன்னுமொரு ராச சபையில்

* இளவேயில்-காலைவெயில் † சருகாதி-கீரைப்ப தார்த்தம் ‡ அகரங்கள்-பிராமணர் வாழ்வீதி.

தூறாக நிந்தைசெய் தூய்குவோர் சிவிகைகள்
சுமந்தே பிழைக்கின்ற பேர்
தொலையா விசாரத் தழுந்துவோர் வார்த்தையிற்
சோர்வுபட லுற்ற பெரியோர்
வீறாக மனையா டனக்கஞ்சி வந்திடு
விருந்தினை யொழித்து விடுவோர்
வீப்புடன் செல்லாத விவகார மதுகொண்டு
மிக்கசபை யேறு மாடர்
மாறாக விவரெலா முயிருடன் செத்த சவ
மாகியொளி மாய்வர் கண்டாய்
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (32)

சிறிதும் பயன்படாதவர்.

பதராகி லுங்கன விபூதிவிளை விக்கும்
பழமைபெறு சுவராகி லும்
பலருக்கு மறைவாமி மாடுரிஞ் சிடுமலம்
பன்றிகட் குபயோக மாம
கதமிகு கடாவென்னி லுழுதுபுவி காக்குமவன்
கழுதையும் பொதி சுமக்குங்
கல்லெனிற் றேவர்களு மாலயமு மாம்பெருங்
கான்புற்று மரவ மனையாம்
இதமிலாச் சவமாகி லுஞ்சிலர்க் குதவிசெயு
மிழிவுறு குறங்காயினு
மிரக்கப் பிடித்தவர்க் குதவிசெயும் வாருகோ *
லேற்றமா னிகை விளக்கும்
மதமது மிகும்பரம லோபரா லுபகார
மற்றொருவ ருக்கு முண்டோ
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (33)

* வாருகோல்-துடைப்பம்.



உலுத்த ரியல்பு.

திரவியங்காக்குமொரு பூதங்கள் போற்பணந்
தேடிப் புதைத்து வைப்பார்
சீலநல மாகவுங் கட்டார்க ணல்லமுது
செய்குணா ரறமுஞ் செயார்
புரவலர்செய் தண்டந் தனக்கும் வலுவாகப்
புகுந்திருட ருக்கு மீவார்
புலவரைக் கண்டவுட னோடிப் பதுங்குவார்
புராணிகர்க் கொன்று முதவார்
விரகறிந்தே பிள்ளை சோறுகறி தினுமளவில்
வெகுபணஞ் செலவாக லால்
விளையாடு கிழவனும் பிள்ளையே பிள்ளையென
மிகுசெட்டி சொன்ன கதைபோல
வரவுபார்க்கின்றதே யல்லாது லோபியர்கண்
மற்றொருவ ருக்கீவ ரோ
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (34)

திருவாழிடங்கள்.

கடவா ரணத்திலுங் கங்கா சலத்திலுங்
கமலாச னந்தன்னி லும்
காகுத்தன் மார்பிலுங் கொற்றவ ரிடத்திலுங்
காலியின் * கூட்டத்தி லும்
நடமாடு பரியிலும் பொய்வார்த்தை சொல்லாத
நலலோ ரிடந்தன்னி லும்
நல்லசுப லக்ஷண மிகுந்தமனை தன்னிலும்
ரணசுத்த வீரர் பாலும்
அடர்கே தனத்திலுஞ் † சுயவரந் தன்னிலு
மருந்துளசி வில்லத்திலு
மலர்தரு கடப்பமலர் தனிலுமிர தத்திலு
மதிகருண மான ரூப

* காலி-பசுக்கூட்டம் † கேதனம்-விருதுக்கொடி.

மடவா ரிடத்திலுங் குடிகொண்டு திருமாது
மாறு திருப்ப ளன்றோ
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (35)

மூதேவி வாழிடங்கள்,

சோரமங் கையர்கணிச முறையார்கள் வாயினிற்
சூதகப் பெண்க ணிழலில்
சூலையிற் சூழ்தலுறு புகையிற் களேபரஞ் *
சுடுபுகையி னீசர் நிழலில்
காரிரவி லரசுநிழ லிற்கடா நிழலினொடு
கருதிய விளக்கு நிழலில்
காமுகரி னிஷ்டையில் லாதவர் முசத்திற்
கடுஞ்சினத் தோர் சபையினில்
ஈரமில் லாக்களர் நிலத்தினி லிராத்தயிரி
லிழிமது பானர் பாலி
லிலைவேல் விளாநிழலி னிதமழுக் கடைமனையி
லேனநா யசகரத் † தாள்
வாரிய முறத்தாள் பெருக்குதூண் மூதேவி
மாறு திருப்ப ளென்பார்
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே (36)

திருத்தினுந் திருந்தாமை.

கட்டியொரு விட்டுச் செழுந்தேனை வார்க்கினுங்
காஞ்சிரங் கைப்பு விடுமோ
கழுதையைக் கட்டிவைத் தோமம் வளர்க்கினுங்
கதிபெறுங் குதிரை யாமோ
குட்டியர வுக்கமு தளித்தே வளர்க்கினும்
கொடுவிட மலாது தருமோ
குக்கனொடு வாலுக்கு மட்டையைக் கட்டினுங்
கோணமை லே நிமிருமோ

* களேபரம்-பிணம். † அசகரம்-கழுதை.



ஒட்டியே குறுணிமை யிட்டாலும் நயமிலர்
யோனிகண் ணாகி விடுமோ
வுலவுகன கர்ப்பூர வாடைபல கூட்டினு
முள்ளியின் குணமாறு மோ
மட்டிகட் காயிரம் புத்திசொன் னாலுமதின்
மார்க்கமரி யாதை வருமோ
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (37)

குறிப்பறிதல்.

மனதிற் கடும்பகை முகத்தினா லறியலா
மாநிலப் பூடுக ளெலாம்
மழையினா லறியலா நல்லார்பொ லார்தமை
மக்களா லறியலா கும்
கலைமருவு சூரரைச் சமரினா லறியலாங்
கற்றவொரு வித்துவா னைக்
கல்விப்ர சங்கத்தி னாலறிய லாங்குணங்
களைநடையி னாலறிய லாம்
தனதக படுத்தது பளிங்கினா லறியலாஞ்
சாதிசொல் லாலறிய லாந்
தருநீதி கேள்வியா லறிய லாம்
வனசவிக சிதவதன பரிபூர ணானந்த
வாலவடி வான வேலா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (38)

குணமாறாமை.

குணமிலாத் துஷ்டமிரு கங்களையு நயகுணங்
கொண்டுட் படுத்தி விடலாங்
கொடிபல விடநோய்க ளியாவுமௌ ஷதந்தந்து
கொடுத்துத் திருப்பி விடலாம்

உணர்விலாப் பிரமராட் சசமுதற் பேய்களை
யுகந்துகூத் தாட்டி விடலா
முபாயத்தி னாற்பெரும் பறவைக்கு நற்புத்தி
புண்டாக்க லாமுயிர் பெறப்
பிணமதை யெழுப்பலா மக்கினி சுடாமற்
பெரும்புன லெனச்செய்ய லாம்
பிணியையு மகற்றலாங் காலதூ தவரையும்
பின்புவரு கென்று சொல்லாம்
மணலையுங் கயிறுத் திரிக்கலாங் கயவர்குண
மட்டுந் திருப்ப வசமோ
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (39)

இத்தீக்குணத்தோரில் விலங்குபோல்வ ரெனல்.

சான்பிடித் ததுபிடிப் பென்றுமே லவர்புத்தி
தள்ளிச்செய் வோர் குரங்கு
சபையிற் குறிப்பறிய மாட்டாம னின்றவர்
தாம்பய னிலாத மரமாம்
வீம்பினா லெளியவரை யெதிர்பண்ணி நிற்குமொரு
வெறியர்குரை ஞமலி யாவார்
மிகநாடி வருவோர் முகம்பார்த் திடாலோபர்
மேன்மையில் லாத கழுதை
சோம்பலொடு பெரியோர் சபைக்குட் படுத்திடுந்
தூங்கலே சண்டிக் கடா
சூதுட னடுத்தோர்க் கிடுக்கணேசெய்திடுந்
துஷ்டனே கொட்டு தேளாம்
மாம்பழந் தனைவேண்டி யங்ஙாளி வீசனை
வலமாக வந்த முருகா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (40)



அற்பர்வாழ்வால் குணம் வேறுபடுதல்.

அற்பர்க்கு வாழ்வுசற் றதிகமா னாலவிழிக்
கியாவருரு வுந்தோன் றிடா
தண்டிகின் றேநல்ல வார்த்தைக ளுரைத்தாலு
மவர்செவிக் கேறி டாது
முற்பக்ஷ மானபேர் வருகினும் வாருமென
மொழியவும வாய் வராது
மோதியே வாதப் பிடிப்புவந் ததுபோல
முன்காலை யகல வைப்பார்
விற்பன மிகுத்தபெரி யோர்செய் தி சொன்னாலும்
வெடுவெடுத் தேசி நிற்பார்
விருதா மகத்துவப் பேயது சவுக்கடி
விழும்போது தீரு மென்பார்
மற்புயந் தனினீப மாலையணி லோலனே
மார்பனே வடிவேல வா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (41)

இத்தீங்குளோ ரிக்கொள்கை போல்வரெனல்.

அன்னைதந் தையர்புத்தி கேளாத பிள்ளையோ
வஷ்டமச் சனியாகு வா
னஞ்சாம லெதிர்பேசி நிற்குமனை யாள்வாக்
கிலங்கார கச்சன்ம மாம்
தன்னையிஞ் சிச்சொன்ன வார்த்தைகே ளாவடிமை
சந்திராஷ் டகமென்ன லாந்
தன்பங்கு தாவென்று சபையேறு தம்பியோ
சார்ந்தசன் மச்சூரி யன்
நன்னயமி லாதவஞ் சனைசெய்த தமையன்மூன்
றாமிடத் தில்வியா ழம்
நாடொறும் விரோதமிடு கொண்டோன் கொடுத்
ராகுகே துக்க ளெனலாம் [துளோன்

மனையனை யன்றுசிறை தனிலிட்டு நம்பற்கு
மந்திர முரைத்த குருவே
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (42

நல்லினஞ் சேர்பயன்.

சந்தன விருக்ஷத்தை யண்டிநிற் கின்றபல
தருவுமவ் வாசனை தருந்
தங்கமக மேருவை யடுத்திடுங் காக்கையுஞ்
சாயல்பொன் மயமே தரும்
பந்தமிகு பாலுடன் விளாவிய தணீரெலாம்
பால்போ னிறங் கொடுக்கும்
படிகமணி கட்குளே நிற்கின்ற வடமுமப்
படியே குணங் கொடுக் கும்
அந்தமிகு மரகதக் கல்லைத் தரித்திடி
லடுத்ததும் பசுமை யாகு
மானபெரி யோர்களொடு சகவாச மதுசெயி
லவர்கள் குணம் வருமென்பர் காண்
மந்தர நெடுங்கிரியின முன்கடல் கடைந்தவர்
மருகமெய்ஞ் ஞான முருகா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (43)

வலியோரையு மூழ்விடாமை.

அன்றுமுடி சூடுவ திருக்கரகு ராமன்மு.
னருங்கா டுறைந்த தென்ன
வண்டரெல் லாமமிர்த முண்டிடப் பரமனுக்
காலம் லபித்த தென்ன
வென்றிவரு தேவர்சிறை மீட்டநீ களவில்வே
டச்சிறைபச் சேர்ந்த தென்ன
மேதினி படைக்குமய னுக்கொருசிரமபோகி
வெஞ்சிறையி லுற்ற தென்ன



என்றுமொரு பொய்சொலா மன்னவன் விலைபோன
தென்னகாண் வல்லமையி னு
லெண்ணத்தி னுலொன்றும் வாராது பரமசிவ
னெத்தனைப் படிமுடியு மாம்
மன்றுதனி னடனமிடு கங்கா தரன்பெற்ற
வரபுத்ர வடிவேல வா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (44)

பெரியோர் வாக்யபரி பாலனஞ்செய்தோர்

தந்தைதாய் வாக்யபரி பாலனஞ் செய்தவன்
றசரத குமார ராமன்
றமையனருள் வாக்கிய பரிபாலனஞ் செய்தோர்க
டருமனுக் கிளைய நால்வர்
சிந்தையி லுணர்ந்துகுரு வாக்யபரி பாலனஞ்
செய்தவ னரிச்சந் திரன்
றேகியென் றோர்க்கிலையெ னுவாக்கிய பாலனஞ்
செய்தவன் றான கன்னன்
சிந்தைதவிர் வாக்யபரி பாலனஞ் செய்தவ
னீள்பெல மிகுத்த வநுமா
னிறையுடன் பத்தாவின் வாக்ய பரிபாலன
திலத்தினு ளாகினி செய்தாள்
மந்தைவழி கோயில்குள முங்குலவு தம்பிமுகன்
மகிழ்தர வுகந்த துணைவா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (45

முயற்சியின் மிக்கதூழெனல்.

வங்காள மேறினும் வாருகோ லொருகாசு
மட்டன்றியதிக மாமோ
வானேறி யுயரப் பறந்தாலு மூர்க்குருவி
வண்ணப் பருந்தாகு மோ

கங்கா சலந்தன்னின் மூழ்கினும் பேய்ச்சுரைக்
காய்நல்ல சுரையாகுமோ
கடலுக்கு ளுழியை யமுக்கியே மொண்டிடிற்
காணுமோ நாளுழி தான்
ஐங்காத மோடினுந் தன்வினைக டன்னுடே
யடையாம னீங்கி விடுமோ
வாரிடஞ் சென்றாலும் வெகுதலைகள் சுற்றினு
மமைத்தபடி யன்றி வருமோ
மங்காத செந்தமிழ்க் கொண்டுநக் கீரர்க்கு
வந்ததுயர் தீர்த்த முருகா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (46)

இடும்பாலழிவு.

சூரபத் மன்பெலமு மிராவணன் றீரமுந்
துடுக்கான கஞ்சன் வலியுந்
துடியான விரணியன் வரப்ரசா தங்களுந்
தொலையாத வாலி திடமும்
பாரமிகு துரியோத னதிணூற் றுவராது
பராக்கிரம மது கைடவர்
பாரிப்பு மாபெலித னண்மையுஞ் சோமுகன்
பாங்கிலுறு வல்லமைகளும்
எரணவு கீசகன் கனதையுந் திரிபுர
ரெண்ணமுந் தக்க னெழிலு
மிவர்களது சம்பத்து மின்றவோ வவரவ
ரிடும்பா லழிந்த வன்றோ
மாரனைக் கண்ணு லெரித்தருள் சிவன்றந்த
வரபுத்ர வடிவேல வா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (47)



நட்புநிலை.

மாமதியின் முயலான ததுதேய் வுழித்தேய்ந்து
வளருமப் போது வளரும்
வாவிதனி லாம்பல்கொட் டிகளதனி னீர்வற்றின்
வற்றிடும் பெருகி லுயரும்
பூமருவு புதல்பூடு கோடையிற் றீய்ந்திடும்
பொங்குகா லந் தழைக்கும்
புண்டரிக மிரவியோ மளவிற் குவிந்திடும்
போதுதய மாகின் மலரும்
தேமுடலி லேக்கிலுயர் கூடவு மிளைக்குமது
தேறிலுயி ருஞ்சிறக் குஞ்
சேர்ந்தோர்க் கிடுக்கணது வந்தாலு நல்லோர்
சினேகமப் படியாகுமே
வாமனசொ ரூபமத யானைமுக னுக்கிளைய
வாலகுரு பரவேல வா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (48)

கைப்பலனுமவை.

பருவத்தி லேபெற்ற சேயும் புரட்டாசி
பாதிசம் பாநடுகை யும்
பலமினிய வாடிதனி லானைவால் போலவே
பயிர்கொண்டு வரு கரும்பும்
கருணையொடு மிக்கநா ணயமுளோர் கையினிற்
கடனிட்டு வைத்த முதலுங்
காலமது நேரிற் றனக்குமிதி யாகமுன்
கற்றுணர்ந் திடு கல்வியும்
விருதரச ரைக்கண்டு பழகிய சினேகமும்
விவேகிகட் குபகார மாம்
வீணல்ல விவையெலாம் கைப்பலன தாகவபி
விர்த்தியாய் வருமென்பர் காண்

மருவுலா வியபீப மாலையுந் தண்டரள
மாலையும் புனை மார்பனே
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (49)

சமயத்துக் குதவாதவை.

கல்லாது புத்தகந் தனியெழுதி வீட்டினிற்
கட்டிவைத் திடு வித்தையுங்
காலங்க ளுக்குதவ வேண்டுமென் றன்னியன்
கையிற் கொடுத்த பொருளும்
இல்லாளை நீங்கியே பிறர்பாரி சதமென்
றிருக்கின்ற குடி வாழ்க்கையு
மேறுமா றுகவே தேசாந் தரம்போ
யிருக்கின்ற பிள்ளை வாழ்வும்
சொல்லான தொன்றுமவர் மனமான தொன்றுமாச்
சொல்லுமவ் வஞ்சகர் நேசமுஞ்
சுகியமா யுண்டென் றிருப்பதெல் லாந்தருண
துரிதத்தி லுதவாது காண்
வல்லான கொங்கைமட மாதுதெய்வானை குற
வள்ளிபங் காள நேயா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (50)

திரும்பமாட்டாதவை.

ஆடரவின் வாயினி லகப்பட்ட தவளையு
மாலைவா யிற் கரும்பு
மரிதான கப்பலிற் பாய்மரக் காற்றினி
லகப்பட்டு மெலி காக்கையும்
நாடறிய வேதாரை வார்த்துக் கொடுத்தது
நமன்கைக்கு ளான வுயிரும்
நலமாக வேயணை கடந்திட்ட வெள்ளமு
நாய்வேட்டை பட்ட முசலும்



தேடியுண் பார்கைக்கு ளானபல வுடைமையுந்
தீவாதை யான மனையுந்
திரள்கொடுங் கோலரசர் கைக்கேறு பொருளுந்
திரும்பிவா ராவென்பர் காண்
மாடமிசை யன்னக் கொடித்திரள்கொள் சோணாடு
வாழவந் திடுமுதல் வனே
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (51)

இதினுமிது நன்றென்பவை.

கடுகடுத் தாயிரஞ் செய்குவதி லின்சொலாற்
கனிகொண் டழைத்த னன்று
கனவேள்வி யாயிரஞ் செய்வதிற் பொய்யுரை
கருத்தொடு சொலாமை நன்று
வெடுவெடுக் கின்றதோ ரவிவேகி யுறவினில்
விவேகியொடு பகைமை நன்று
வெகுமதிக ளாயிரஞ் செய்வதி னரைக்காசு
வேளைகண் டுதவ னன்று
சடுதியிற் பக்குவஞ் சொல்லுங் கொடைக்கிங்கு
சற்றுமிலை யென்ன னன்று
சம்பத் துடன்பிணியன் மெலிகுவதி னோயற்ற
தாரித்தி ரியநன்று காண்
மடுவினிற் கரியோல மென்னவந் தருள்செய்த
மான்மருக னான முதல்வா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (52)

பலகூடினு மொன்றற் கீடாகாதவை.

தாரகைக ளொருகோடி வானத் திருக்கினுஞ்
சந்திரற் கீடாகுமோ
தாருவிற் கோடி தோனிகள் பலகூடினுமொரு
தம்பட்ட வோசை யாமோ

கோரமிகு பன்றியின் குட்டிபல கூடினொரு
குஞ்சரக் கன்றாகுமோ
கொட்டிமலர் வாவியிற் பலகூடி னுமொரு
கோகனத மலராகுமோ
பாரமிகு மாமலைகள் பலகூடி னுமொரு
பைம்பொன்மக மேருவாமோ
பலனிலாப் பிள்ளைக ளனேகம் பிறந்தும்விற்
பனொருவ னுக்கு நிகரோ
வாரணக் கொடியொரு கரத்திற் பிடித்தொன்றில்
வடிவே லணிந்த முருகா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (53)

அருமை யறிதல்.

மணமாலை யருமையைப் புனைபவர்க ளேயறிவர்
மட்டிக் குரங்கறியுமோ
மக்களுட யருமையைப் பெற்றவர்க ளேயறிவர்
மலடிதா னறிவதுண்டோ
கணவனுட யருமையைக் கற்பான மாதறிவள்
கணிகையா ளவை ளறிவளோ
கருதுமொரு சந்தியின் பாண்டமென்பதை வரும்
களவான நாயறியுமோ
குணமான கிளியருமை தனைவளர்த் தவரறிவர்
கொடியபூ னையுமறியுமோ
குலவுபெரி யோரருமை நல்லோர்க ளேயறிவர்
கொடுமூடர் தாமறிவரோ
மணவாள நீயென்று குறவள்ளி பின்றொடர
வனமூடு தழுவு மழகா
மயிலேறி விளையாடு குகனேபுல்வயனீடு
மலைமேவு குமரேசனே. (54)



தீச்சார்பாற் பயன்படாதவை.

மடுவினிற் கஞ்சமல ருண்டொருவ ரணுகாமல்
வன்முதலை யங்கிருக்கும்
மலையினிற் றேனுண்டு சென்றொருவர் கிட்டாமன்
மருவியதில் வண்டிருக்கும்
நெடுமைதிகழ் தாழைமல ருண்டொருவ ரணுகாம
னீங்காத முள்ளிருக்கும்
நீடுபல சந்தன விருக்ஷமுள தணுகாது
நீளரவு சூழ்ந்திருக்கும்
குடிமல்கி வாழ்கின்ற வீட்டினிற் செல்லாது
குரைநாய்க ளங்கிருக்கும்
கொடுக்குந்தி யாகியுண் டிடையூறு பேசுங்
கெடும்பாவி யுண்டு கண்டாய்
வடுவையுங் கடுவையும் பொருவுமிரு கண்ணிகுற
வள்ளிக் குகந்த கணவா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (55)

வேசையரிழிவு.

பூவில்வே சிகள்வீடு சந்தைப் பெரும்பேட்டை
புனைமலர் படுக்கை வீடு
பொன்வாசல் கட்டிபொது வம்பல முடுத்ததுகில்
பொருவில்கூ தாடுசாலை
மேவலா கியகொங்கை கையாடு திரள்பந்து
விழிமனங் கவர் தூண்டிலாம்
மிக்கமொழி நீர்மே லெழுத்ததிக மோகமொரு
மின்னலிரு தொடை சர்ப்பமாம்
ஆவலா கியவல்குலோ தண்டம் வாங்குமிட
மதிகபடமா பனதுகல்
லமிர்தவா யிதழ்சித்ர சாலையெச் சிற்குழி
யவர்க்காசை வைக்கலாமோ

மாவடிவு கொண்டே யொளித்தவொரு சூரனை
வதைத்தவடி வேலாயுதா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயநீடு
மலைமேவு குமரேசனே. (56)

கலிகாலக் கொடுமை.

தாய்புத்தி சொன்னான் மறுத்திடுங் காலமுயர்
தந்தையைச் சீறுங் காலஞ்
சற்குருவை நிந்தைசெய் காலமெய்க் கடவுளைச்
சற்றுமெண் ணாத காலம்
பேய்தெய்வ மென்றுபசரித்திடுங் காலம்
புரட்டருக் கேற்ற காலம்
பெண்டாட்டி வையினுங் கேட்கின்ற காலநற்
பெரியர்சொல் கேளாத காலம்
தேய்வுடன் பெரியவன் சிறுமையுறு காலமிகு
சிறியவன் பெருகு காலஞ்
செருவில்விட் டோடினோர் வரிசைபெறுகாலம்வசை
செப்புவோர்க் குதவு காலம்
வாய்மதம் பேசிவிடு மனியாய காரர்க்கு
வாய்த்தகலி கால மையா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயநீடு
மலைமேவு குமரேசனே. (57)

அவரவர்க் குரியவை.

கல்வியொடு கனமுறச சபையின்மேல் வட்டமாக்
காணவைப் போன் பிதாவாங்
கற்றுணர்ந் தேதனது புகழாற் பிதாவைப்ர
காசஞ்செய் வோன் புத்திரன்
செல்வமிகு கணவனே தெய்வமென் றனுதினஞ்
சிந்தைசெய் பவள்மனைவி யாஞ்
சினேகிதன் போலவே யன்புவைத் துண்மை
செப்புமவ னேசகன் தான்



தொல்வளமிகுந்தநூற் கலைதெரிந் துறுதிமொழி
சொல்லுமவனே குரவனாஞ்
சொன்னநெறி தவறாமல் வழிபாடு செய்துவரு
துய்யனே யினிய சீஷன்
வல்விரக மிஞ்சுகர குஞ்சரி யுடன் குறவர்
வஞ்சியை மணந்த கணவா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயநீடு
மலைமேவு குமரேசனே. (58)

சிறுமையிற் பெருமை.

சேற்றிற் பிறந்திடுங் கமலமலர் கடவுளது
திருமுடியின் மேலிருக்குந்
திகழ்சிப்பி யுடலிற் கனித்தமுத் தரசரது
தேகத்தின் மேலிருக்கும்
தோற்றியிடு பூச்சியின் வாயினால் பட்டென்று
பூசைக்கு நேச மாகும்
புகலரிய வண்டெச்சி லான தேன் றேவர்கள்
புனிதவபி டேக மாகும்
சாற்றிய புலாலொடு பிறந்தகோ ரோசனை
சவாதுபுழு கனைவர்க்கு மாஞ்
சாதியீ னத்திற் பிறக்கினுங் கற்றோர்கள்
சபையினிற் றலைவ தன்றோ
மாற்றிச் சுரத்தினை விபூதியா லுடல்குளிர
வைத்த மெய்ஞ்ஞான முதலே
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (59)

செய்த் தகாதவை.

தானு சரித்துவரு தெய்வமிது வென்றுபொய்ச்
சத்தியஞ் செயல்வி டாத
தன்வீட்டி லேற்றிய விளக்கென்று முத்தர்
தனைக் கொடுத் தாலது சுடுங்

தீ

ஆனாலு மேலவர்கண் மெத்தவுந் தனதென்
    றடாததது செயிற் கெடுதியா
மானதான் மெத்தப் பழக்கமா னாலுஞ்செ
    யாதுசெய் தாற்கொன் றிடும்
தீனான தினிதென்று மீதூண் விரும்பினாற்
    றேகபீ டைகளே தருஞ்
செகராசர் தயவென்ன வேலாத காரியஞ்
    செய்தான் மனம்பொறார் காண்
வானாடு புகழுமொரு சோணாடு தழையவிவண்
    வந்தவ தரித்த முதலே
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
    மலைமேவு குமரேசனே. (60)

நடுவு நிலைமை.

வந்தவிவ காரத்தி லினியபரி தானங்கள்
    வருமென்று நேச ரென்றும்
வன்பகைஞ ரென்றுமய லோரென்று மிக்கதன
    வானென்று மேழை யென்றும்
இந்தவகை யைக்குறித் தொருபக்ஷ பாதமோ
    ரெள்ளள வுரைத்தி டாம
லெண்ணமுட னேலிகித புத்தியொடு சாக்ஷிக்கு
    மேலுண்மை யது தேர்ந்து
முந்தவிரு தலையுஞ் சமன்செய்த கோல்போன்
    மொழிந்திடிற் றர்மமது காண்
முனிவீம னுடல்பாதி மிருகந்தனக் கென்று
    முன்றருமர் சொன்னதலவோ
மைந்தனென வன்றுமை முலைப்பால் கொடுத்திட
    வளர்ந்தருள் குழந்தை வடிவே
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
    மலைமேவு குமரேசனே (6 )



பக்ஷ பாதம்.

ஓரவிவ காரமா வந்தவர் முகம்பார்த்
    துரைப்போர் மலைக்குரங் கா
முயர்வெள் ளெருக்குடன் முளைத்துவிடு மவரில்
    முறையுமூர் பாழ்நத்த மாம்
தாரணியி லவர்கள்கிளை நெல்லியிலை போலுஞ்
    சமானமா வெழுபிறப் புஞ்
சந்ததியி லாதழலவ ரவர்முகத் தினின்மூத்த
    தையலே குடியிருப் பாள்
பாரமிவ ரென்று புவி மங்கையு நடுங்குவாள்
    பழித்ததூர் மரண மாவார்
பகர்முடிவி லேரவுர வாதிநர கத்தனு
    பவிப்பரெப் போது மென்பார்
வாரமுட னருணகிரி நாதருக் கநுபூதி
    வைத்தெழுதி யருள் குருபரா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
    மலைமேவு குமரேசனே. (62)

ஒன்றிலாமையாற் சிறவாதவை.

கொங்கையில் லாதவட் கெத்தனைப் பணியுடைமை
    கூடினும் பெண்மை யில்லை
கூறுசிறை கல்வியில் லாமலெத் தனைகவிதை
    கூறினும் புலமை யில்லை
சங்கையில் லாதவர்க் கெத்தனை விவேகந்
    தரிக்கினுங் கனதை யில்லை
சட்சுவை பதார்த்தவகை யுற்றாலு நெய்யிலாச்
    சாதமுந் திர்த்தி யில்லை
பங்கய மிலாமலெத் தனைமலர்கள் வாவியிற்
    பரித்து மேன்மை யில்லை
பத்தியில் லாமல்வெகு நியமமா யர்ச்சனைகள்
    பண்ணினும் பூசை யில்லை

மங்கைய ரிலாமனைக் கெத்தனை யருஞ்செல்வம்
வரினுமில் வாழ்க்கையில்லை
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (63)

அளவு படாதவை.

வாரியா ழத்தையும் புனலெறியு மலைகளையு
மானிடர்கள் சனனத்தை யும்
மன்னவர்க ணினைவையும் புருஷர்யோகங்களையும்
வானினுயர் நீளத்தை யும்
பாரிலெழு மணலையும் பலபிராணிகளையும்
படியாண்ட மன்னவரை யும்
பருப்பதத் தின்னிறையு மீசுறச் செயலையும்
பனிமாறி பொழிதுளியை யும்
சீரிய தமிழ்ப்புலவர் வாக்கிலெழு கவியையுஞ்
சித்தர்தம துள்ளத்தை யுந்
தெரிவையர்கள் சிந்தையு மிவ்வள வெனும்படி
தெரிந்தள விடக்கூடு மோ
வாரிச மடந்தை குடிகொண்டநெடு மாலுக்கு
மருகனென வந்த முருகா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (64)

பிறர்மனை நயத்தல்.

தந்தார மன்றியே பரதார மேனினைவு
தனைவைத்த காமுகர்க் குத்
தயையில்லை நிசமில்லை வெட்கமில்லை சமரினிற்
றைரியஞ் சற்று மில்லை
அந்தார மில்லைதொடர் முறையில்லை நிலையில்லை
யறிவில்லை மரபு மில்லை
யறமில்லை நிதியில்லை யிரவினிற் றனிவழிக்
கச்சமோ மனதி லில்லை



நந்தாத சனமில்லை யினமில்லை யெவருக்கு
நட்பில்லை கனதை யில்லை
நயமில்லை யிளமைதனில வலிமையிலை முத்திபெறு
ஞானமிலை யென்பர் கண்டாய்
மந்தார பரிமள சுகந்தாதி புனையுமணி
மார்பனே யருளாள னே
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (65)

மானம் விடாமை.

கனபாரமேறிற் பிளந்திடுவ தன்றியே
சுற்றாண் வளைந் திடாது
கருதலர்க ளாலுடைந் தாலுமுயி ரளவிலே
கனசூர னமரின் முறியான்
தினமோ ரிடுக்கண்வந் துற்றாலும் வேங்கைதோல்
சீவனள விற்கொ டாது
தீரமான பெரியோர் சரீரங்க ளிளைக்கினுஞ்
செப்புமுறை தவறி டார்கள்
வனமேறு கவரிமா வுயிர்போகு மளவுந்தன்
மயிரினொன் றுங்கொ டாது
வாராத வாபத்து வருகினுங் கற்புடைய
மாதுநிறை தவறி நடவாள்
மனதார வுனதடைக் கலமென்ற கீரற்கு
வன்சிறை தவிர்த்த முருகா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (66)

திருவருட் சிறப்பு.

திருமகள் கடாக்ஷமுண் டானு லெவர்க்குஞ்
சிறப்புண்டு கனதை யுண்டு
சென்றவழி யெல்லாம் பெரும்பாதை யாய்விடுஞ்
செல்லாத வார்த்தை செல்லும்

பொருளொரு தரும்பு மரியாதையாஞ் செல்வமோ
புகல்பெருக் காறு போலாம்
புவியின்முன் கண்டுமதி யாதபேர் பழகினவர்
போலவே நேச மாவார்
பெருமையொடு சாதியி லுயர்ச்சிதரு மனுதினம்
பெரும்பிர திஷ்டை யுண்டாம்
பிரியமொடு பகையாளி கூடவுற வாகுவான்
பேச்சினிற் பிழை வாரா து
வருமென நினைத்தபொருள் கைகூடி வருமதிக
வல்லமைகண் மிகவு முண்டாம்
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (67)

நட்புநிலை.

கதிரவ னுதிப்ப தெங்கே நளின மெங்கே
களித்துள மலர்ந்த தென்ன
கார்மேக மெங்கே பசுந்தோகை யெங்கே
கருத்தினட் பான தென்ன
மதியமெங் கேபெருங் குமுதமெங் கேமுக
மலர்ந்து மகிழ் கொண்ட தென்ன
வல்லிரவு விடிவதெங் கேகோழி யெங்கே
மகிழ்ந்துகூ விடுத லென்ன
நிதியரச ரங்கே யிருந்தாலு மவர்களொடு
நேசமொன் றுயிருக்கு
நீதிமிகு நல்லோர்க ளெங்கிருந் தாலுமவர்
நிறைபக்ஷ மறவார்கள் காண்
மதிலுடன் கோபுரமும் வாவியும் புடைசூழ
மருவுசோ ணட்டதிப னே
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (68)



காலமறிதல்.

காலம் பகற்கால மென்றிடுங் கூகையைக்
கனகமுடி யரசர் தாமுங்
கருதசய காலமது கண்டந்த வேளையிற்
காரிய முடித்து விடுவார்
மேகமுங் கார்கால மதுகண்டு பயிர்விளைய
மேன்மேலு மாரி பொழியும
மிக்கான வறிவுளோர் வருதருண காலத்தின்
மிடியாள ருக்குதவு வார்
நாகரிக முறுகுயில் வசந்தகா லத்திலே
நலமென்று கந்து கூவு
நல்லோர் குறித்ததைப் பதருமை லந்தந்த
நாளையின் முடிப்பர் கண்டாய்
வாகனைய காலைகண மாலைபுல் லெனுதுலக
தாடிக்கை நிசமல்ல வோ
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (69)

இடனறிதல்.

தரையதனி லோடுதேர் நீள்கடலி லோடுமோ
சலதிமிசை யோடு கப்பல்
தரைமீதி லோடுமோ தண்ணீரி லுறுமுதலை
தன்முனே கரி நிற்குமோ
விரைமலர் முடிப்பரமர் வேணியர வினைவெல்ல
மிக்கருட னாலாகு மோ
வேங்கைக ளிருக்கின்ற காடுதனி லஞ்சாமல்
வேறொரு வர்செல்ல வசமோ
துரைகளைப் பெரியோரை யண்டிவாழ் வோர்தமைத்
துஷ்டர்பகை யென்ன செய்யுந்
துணைகண்டு சேரிட மறிந்துசே ரென்றௌவை
சொன்னகதை பொய்யல்ல வே

வரையூது மாயனை யடுத்தலாற் பஞ்சவர்கள்
வன்போர் செயித்த தன்றோ
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (70)

யாக்கைநிலையாமை.

மனுநன்மாந் தாதாமு னனவர்க ளெல்லாரு
மண்மே லிருந்து வாழ்ந்து
மடியா திருந்த பேரில்லையவர் தேடியதை
வாரிவைத் தவரு மில்லை
யனியதனை நம்பியே பேர்பூட்டு கதையெனப்
பாழான வுடலை நம்பிப்
பார்மீதி லின்னமவெகு நாளிருப் போமென்று
பலகோடி நினைவை யெண்ணி
அந்தமாய் விருதாவின் மாய்வதே யல்லாம
லன்பாக நின் பதத்தை
யர்ச்சித்து முத்திபெறல் வேண்டுமென் றெண்ணா
ளாசைவலை யிற்சுழலு வார்
வனிதையர்கள் காம விகாரமே பகையாகு
மற்றுமொரு பகைமை யுண்டோ
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (71)

வேட்டகத் திகழ்ச்சி.

வேட்டகந் * தன்னிலே மருகன் வந்திடு மளவின்
மேன்மேலு முபசரித்து
விருந்துகள் சமைத்துநெய் பாறயிர்பதார்த்தவகை
வேண்டுவ தெலா மமைப் பார்
ஊட்டமிகு வர்க்க வகை செய்திடுவர் தைலமிட்
டுறுதியாய் முழுகு விப் பா
ரோயாது தின்னவே பாக்கிலை கொடுத்திடுவ
ருற்றநா ளலாகி லோ

* வேட்டகம் - மாமியார் வீடு.



நாட்டமொரு படியிறங் குவதுபோல் மரியாதை
நாளுக்கு நாள்குறைவு றும்
நகைசெய்வர் மைத்துனர்க ளனுவல்பார்போவென்று
நாணுமன் மாமி சொல்வாள்
வாட்டமனை யாளொரு துரும்பாய் மதிப்பளவன்
மட்டியினு மட்டி யன்றோ
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (72)

செல்வநிலையாமை.

ஓடமிடு மிடமது மணற்சடுஞ் சுடுமிடமு
மோடமிக வோடக்கு
முற்றதோ ராற்றின்மடு மேடாகு மேடெலா
முறுபுனல் கொண் மடுவாயிடும்
நாடு காடாகுமுயர் காடுநா டாகிவிடு
நவில்சகடு மேல்கீழதாய்
நடையூறு சந்தைபல கூடுமிட னேகலையு
நன்னிலவு மிருளாய் விடும்
நீடுபகல் போயபின் பிரவாகு மிரவுபோய்
நிறைபகற் போதாய் விடும்
நிதியோர் மிடித்திடுவர் மிடியோர் செழித்திடுவர்
நிசமல்ல வாழ்வு கண்டாய்
மாடுமனை பாரிசன மக்கணிதி பூஷணமு
மருவுகன வாகு மன்றோ
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (73)

பிறந்தார் பெறுபெறு.

சடமொன் றெடுத்தாற் புவிக்குநல் லவனென்று
தன்பேர் விளங்க வேண்டுஞ்
சதிருடனி தல்லாது மெய்ஞ்ஞானி யென்றவ
தரிக்கவே வேண்டு மல்லால்

திடமினிய ரணசூர வீரனிவ னென்னவே
திசைமெச்ச வேண்டு மல்லால்
தேகியென வருபவர்க் கில்லையென் னுமலே
செய்யவே வேண்டு மல்லால்
அடைவுடன் பலகல்வி யாராய்ந்து வித்துவா
னாகவே வேண்டு மல்லா
லறிவான துரைமக்க ளாகவர வேண்டுமிவ
ரதிகபூ பால ரையா
வடகுவடு கிடுகிடென வெழுகடலு மலையெறிய
மணிபுரகன் முடிக ணெரிய
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (74)

வேசை நிந்தை.

தேடித்தம் வீட்டிற் பணக்காரர் வந்திடிற்
றேகசீ வன்போலவே
சினேகித்த வும்மையொரு பொழுது சாணுவிடிற்
செல்லுறா தன்ன மென்றே
கூடிச சுகிப்பரென் னாசையுன் மேலென்று
கூசாம லாணை யிடுவார்
கொங்கையை வெடிக்கப் பிடிக்கக் கொடுத்திதழ்
கொடுப்பர்சும் பன முகப்ப
வேடிக்கை பேசியே கைமுதல் பறித்தபின
வேறுபட நிந்தை செய்து
விடவிடப் பேசுவார் தாய்சலக மூட்டியே
விட்டுத் துரத்தி விடுவார்
வாடிக்கை யாயிந்த வண்டப் பரத்தையர்
மயக்கத்தை நம்ப லாமோ
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (75)



இதற்கிது உறுதியெனல்.

கைக்குறுதி வேல்வின் மனைக்குறுதி மனையாள்
கவிக்குறுதி பொருளடக் கந்
கன்னியர் தமக்குறுதி கற்புடைமை சொற்குறுதி
கண்டிடிற் சத்ய வசனம்
மெய்க்குறுதி முன்பின் சபைக்குறுதி வித்வசனம்
வேசையர்க் குறுதி தேடல்
வீரசருக் குறுதிபெண் மூப்பினுக் குறுதியூண்
வீரருக் குறுதி தீரம்
செய்க்குறுதி நீரும பார்க்குறுதி செங்கோல்
செழும்படைக் குறுதி வேழஞ்
செலவந் தனக்குறுதி பிள்ளைசண காக்குறுதி
சேர்ந்திடுஞ் சர்ச்சனர்க ளாம்
மைக்குறுதி யாகிய விருக்கும மடந்தைசுர
மங்கைபரு வுந்தலைவ னே
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (76)

வறுமையிற் சிறுமை.

வறுமைதான் வந்திடிற் றாய்பழுது சொல்லுவாண்
மனையாட்டி சற்று மெண்ணாள்
வாக்கிற் பிறக்கின்ற சொல்லெலாம் பொல்லாத
வசனமாய் வந்து விளையு:
சிறுமையொடு தொலையா விசாரமே யல்லாது
சிந்தையிற் றைரிய மிலை
செய்யசபை தன்னிலே சென்றுவர வெட்கமாஞ்
செல்வரைக் காணி னுனும்
உறுதிபெறு வீரமுங் குன்றிடும் விருந்துவரி
னுயிருடன் செத்த பிணமா
முலகம் பழித்திடும் பெருமையோர் முன்புசென்
றொருவரொடு செய்தி சொன்னால்

மறுவசன முஞ்சொலார் தன்பிணிற்றுன்பமிது
வந்தணுகி டாதருளு வாய்
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (77)

தீச்சார்பா னன்மையிழப்பு.

ஆனைதண் ணீரினிழல் பார்த்திடத் தவளைசென்
றங்கே கலக்கி யுலவு
மாயிரம் பேர்கூடி வீடுகட்டிடிலேத
மறை குறளு முடனே வரும்
ஏனைநற் பெரியோர்கள் போசனஞ் செயுமளவி
லீக்கிடந் திசைகேட தா
மின்பமிகு பசுவிலே கன்றுசென் றூட்டுதற்
கினியகோ னதுதடுக் கும்
சேனைமன் னவரென்ன கருமகிய மிக்கினுஞ்
சிறியோர்க ளாற்குறை படுஞ்
சிங்கத்தை யும்பெரிய ரிஷபத்தை யுன்பகைமை
செய்த தொரு நரியல்ல வோ
மானையுந் திகழ்தெய்வ யானையுந் தழுவுமணி
மார்பனே யருளாள னே
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (78)

இடையூறுற்றும் பயன் படாதவை.

ஆறுதண் ணீர்வற்றி விட்டாலு மூற்றநீ
ரமுதபா னங்கொடுக்கு
மாதவனை * யொருபாதி கட்செவி † மறைத்தாலு
மப்போது முதவிசெய் வன்
கூறுமதி தேய்பிறைய தாகவே குறையினுங்
குவலயத் திருள் சிதைக்கும்
கொல்லைதான் சாவிபோய் விட்டாலு மங்குவரு
குருவிக்கு மேய்ச்ச லுண்டு

* ஆதவன்-சூரியவன் † கட்செவி பாம்பு,



வீறுட னுதாரிதான் மிடியான போதினினு
மிகநாடி வருப வர்க்கு
வேறுவகை யில்லையென் றுரையாத் யன்றள
வியந்துள மகிழ்ந் துதவுவான்
மாறுபடு சூரசங் காரகம் பீரனே
வடிவே லணிந்த முருகா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (79)

இன்னவர்க்கிது வில்லையெனல்.

சார்பிலா தவருக்கு நிலையேது முதலிலா
தவருக் கிலாப மேது
தயையிலா தவர்தமக குரவேது பணமிலா
தார்க்கேது வேசை யுறவு
ஊரிலா தவர்தமக் காசேது பசிவேளை
யுண்டிடார்ச் குறுதி நிலையே
தண்மையில் லாதவர்க் கறமேது முயல்விலார்க்
குறுவதொரு செல்வ மேது
சோர்விலா தவருக்கு மற்றுமொரு பயமேது
சுகமிலார்க் காசை யேது
துர்க்குணமி லாதவர்க் கெதிராளி யேதிடர்செய்
துஷ்டர்க் கிரக்க மேது
மார்புருவ வாலிமே லஸ்திரம் விடுத்தநெடு
மான்மருக னான முருகா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (80)

இதினுமிது நன்றெனல்.

பஞ்சரித் * தருமையறி யார்பொருளை யெய்தலிற்
பலர்மனைப் பிச்சை நன்று
பரிவாக வுபசார மில்லா விருந்தினிற்
பட்டினி யிருக்கை நன்று

* பஞ்சரித்து-உபசாரமாய்ப்பேசி.

தஞ்சமொரு முயலையடு வென்றிதனில் யானையொடு
சமர்செய்து தோற்றனன்று
சரசகுண மில்லாத பெண்களைச் சேர்தலிம்
சன்னியா சித்தனன்று
அஞ்சலா தங்களொடு நட்பா யிருப்பதனி
லரவினொடு பழகுவது நன்
றந்தணர்க் காபத்தி னுதவா திருப்பதனி
லாருயிர் விடுத்தனன்று
வஞ்சக ருடன்கூடி வாழ்தலிற் றனியே
வருந்திடுஞ் சிறுமை நன்று
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (81)

கிலையாதவை.

கொற்றவர்கள் ராணுவமு மாறுநே ராகிய
குளங்களும் வேசை யுறவுங்
குணமிலார் நேசமும் பாம்பொடு பழக்கமுங்
குலவுநீர் விளையாடலும்
பற்றலார் தமதிடை வருந்து விசுவாசமும்
பழையதா யாதி கிணறும் *
பாதார மாதரது போகமும் பெருகிவரு
பாங்கான வாற்று வரவும்
நற்றுமொரு தூர்ப்புத்தி கேட்கின்ற பேருறவு
நல்லமத யானை நட்பும்
நாவினல லுறவுமொரு நாள்போலி ராதிவைக
ணம்பப் படாது கண்டாய்
மற்றுமொரு துணையில்லை நீதுணையே னப்பரவும்
வானவர்கள் சிறை மீட்ட வா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (82)

* கிணறு-உருக்கம்.



நற்புலவர் தீப்புலவர்செயல்.

மிக்கான சோலையிற் குயில்சென்று மாங்கனி
விருப்பமொடு தேடி நாடும்
மிடைகருங் காகங்க ளெக்கனி யிருந்தாலும்
வேப்பங் கனிக்கு நாடும்
எக்காலும் வரிவண்டு பங்கேரு கத்தினி
லிருக்கின்ற தேனை நாடு
மெத்தனை சுகந்தவகை யுற்றாலு முருள்வண்
டினந்தூர் மலத்தை நாடும்!
தக்கோர் பொருட்சுவை நயங்களெங் கேயென்று
தாம்பார்த் துகந்து கொள்வார்
தாழ்வான வன்கண்ணர் குற்றமெங் கேயென்று
தமிழிலா ராய்வர் கண்டாய்
மைக்காவி விழிமாது தெய்வானை யுங்குறவர்
வள்ளியுந் தழுவு தலைவா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (83)

தாழ்தற் பெருமை.

வேங்கைகள் பதுங்குதலு மர்மூகி லொதுங்குதலும்
விரிசிலை குனிந் திடுதலும்
மேடம தகன்றிடலும் யானைக ளொடுங்குதலும்
வெள்விடைக டுள்ளி விழலும்
மூங்கில்கள் வணங்குதலு மேலவ ரிணங்குதலு
முனிவர்க ணயந்து கொளலும்
முதிர்படை யொதுங்குதலு வினைஞர்க ளடங்குதலு
முதலினர் பயந் திடுதலும்
ஆங்கரவு சாய்குதலு மகிழ்மல ருலர்ந்திடலு
மாயர்குழல் சூடு படலு
மம்புவியி லிவைகாரி யங்களுக் கல்லாம
லதனு லிளைப்பு வருமோ

மாங்கனிக் காவரனை வலமது புரிந்தவளர்
மதகரிக் கிளைய முருகா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (84)

தெய்வச் செயல்.

சோடாய் மரத்திற் புறாரண்டிருந் திடத்
துறவுகண்டே வேடுவன்
றேலாம லவைமெய்ய வேண்டுமென் றொருகணை
தொடுத்துவில் வாங்கி நிற்க
ஊடாடி மேலே யெழும்பிடி லடிப்பதற்
குலவுரா சாளி கூட
வுயரப் பறந்துகொண் டேதிரிய வப்போ
துதைத்தசிலை வேட னடியில்
சேடாக வல்விடந் தீண்டவே யவன்விழச்
சிலையிற் றொடுத்த வாளி
சென்றி ராசாளிமெய் தைத்துவிழ வவ்விரு
சிறைப்புறா வாழ்ந்த வன்றே
வாடாம லிவையெலாஞ் சிவன்செயல்க ளல்லாதுன்
மனச்செயலி னாலும் வருமோ
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (85)

பாடலியல்பு.

எழுத்தசைகள் சீர்தளைக ளடிதொடைகள் சிதையா
திருக்கவே வேண்டு மப்பா
வீரைம் பொருத்தமொடு மதுரமாய்ப் பளபளப்
பினியசொற் கமைய வேண்டும்
அழுத்தமிகு குறளினுக் கொப்பாக வேபொரு
ளடக்கமு மிருக்க வேண்டு
மணமான பாவின் மிசைந்தவரல் வேண்டுமு
னலங்கார மூற்ற துறையில்



பழுத்தள முவந்தோசை யுற்றுவரல் வேண்டும்
படிக்குமிசை கூடல் வேண்டும்
பாங்காக வின்னறை பொருந்திடச் சொற்கவிதை
பாடிற் சிறப்பென்பர் காண்
மழுத்தினஞ் செங்கைதனில் வைத்தகங் காளனருண்
மைந்தனென வந்த முருகா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (86)

விபூதிதரிக்கு முறைமை.

பத்தியொடு சிவசிவா வென்றுதிரு நீற்றைப்
பரிந்துகை யாலெடுத் துப்
பாரினில் விழாதபடி யண்ணாந்து செவியொடு
பருத்தபுய மீதி லொழுக
நித்தமூ விரல்களா னெற்றியி னழுந்தலுற
நினைவாய்த் தரிப்ப வர்க்கு
நீடுவினை யணுகாது தேகபரி சுத்தமா
நீங்காம னிமல னங்கே
சத்தியொடு நித்தம்விளை யாடுவன் முகத்திலே
தாண்டவஞ் செய்யுந் திரு
சஞ்சலம வராதுபர கதியுதவு மிவரையே
சத்தியுஞ் சிவனென்ன லாம்
மத்தினிய மேருவென வைத்தமு தினைக்கடையு
மான்மருக னான முருகா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (87)

விபூதிவாங்கு முறைமை.

பரி * தனி லிருந்துமியல் சிவிகையி லிருந்துமுயர்
பலகையி லிருந்து மிகவே
பாங்கான வம்பலந் தனிலே யிருந்தும்
பருத்ததிண் ணையிலிருந் தும்

* பரி-குதிரை.

தெரிவொடு கொடுப்பவர்கள் கீழ்நிற்க மேனின்று
திருநீறு வாங்கி யிடினுஞ்
செங்கையொன் றாலும்விரன் மூன்றாலும்வாங்கினுந்
திசழ்தம்ப லத்தி னோடும்
அரியதொரு பாதையி னடக்கின்ற போதிலு
மசுத்தநிற மான வதிலு
மங்கே தரிக்கினுந் தந்திடிற் றள்ளினு
மவர்க்குநர கென்பர் கண்டாய்
வரிவிழி மடந்தைகுற வள்ளிநா யகிதனை
மணந்து மகிழ் சகநாதனே
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (88)

இவ்வுறுப்பாற் பயனில்லெனல்.

தேவால யஞ்சுற்றி டாதகா லென்னகா
றெரிசியாக் கண்ணென்ன கண்
தினமுமே நின்கமல பாதத்தை நினையாத
சிந்தைதா னென்ன சிந்தை
மேவாக மஞ்சிவ புராணமவை கேளாமல்
விட்டசெவி யென்ன செவிகள்
விமலனை வணங்காத சென்னியென் சென்னிபணி
விடைசெயாக் கையென்ன கை
நாவார நினையேத் திடாதவா யென்னவாய்
நற்றீர்த்த மூழ்கா வுட
ஞனிலத் தென்னவுடல் பாவியாகிய சனன
நண்ணினாற் பலனேது காண்
மாவாகி வேலைதனில் வருசூரன் மார்புருவ
வடிவேலை விட்ட முருகா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (89)



நற்பொருளொடு தீப்பொருள் பிறத்தல்.

கோகனக மங்கையுடன் மூத்தவள் பிறந்தென்ன
குலவுமா ட்டின்க ணதர்தான்
கூடம்பிறந்தென்ன தண்ணீரி னுடனே
கொடும்பாசி யுற்று மென்ன
மாக * ருணு மமுதினொடு நஞ்சும் பிறந்தென்ன
வல்லிரும் பிற்றுருத் தான்
வந்தே பிறந்தென்ன நெடுமரந் தனின்மொக்குள்
வளமொடு பிறந்தென்ன வுண்
பாகமிகு செந்நெலொடு பதர்தான் பிறந்தென்ன
பன்னுமொரு தாய்வயிற் றிற்
பண்புறு விவேகியொடு கயவர்கள் பிறந்தென்ன
பலனேது மில்லை யன்றோ
மாகனக மேருவைச் சிலையென வளைத்தசிவன்
மைந்தனென வந்த முருகா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (90)

தன்னினத்தா லழிவு.

குலமான சம்மட்டி குறடுகைக் குதவியாய்க்
கூறிரும் புகளை வெல்லுங்
கோடாலி தன்னுளே மாமத நுழைந்துதன்
கோத்திர மெலா மழிக்கும்
நலமான பார்வைசேர் குருவியா னதுவந்து
நண்ணுபற வைகளை யார்க்கு
நட்புடன் வளர்த்தகலை மானொன்று சென்றுதன்
னவில்சாதி தனை யிழுக்கும்
உலவுநற் குடிதனிற் சோரர்க ளிருந்துகொண்
டேற்றுரை யிடழிப்ப
ருளவனில் ராமனூ ரழியா தெனச்சொல்லு
முலகமொழி நிசமல்ல வோ

* மாகர்-தேவர்.

வயிராக வந்தர னிடத்திற் கனிகொண்ட
மதயானை தன்சோ தரா
மயிலேறி விளையாடு குகனேபுல்வயனீடு
மலைமேவு குமரேசனே. (91)

வீணுக் குழைத்தல்.

குயின்முட்டை தனதென்று காக்கை யடைகாக்குங்
குணம்போலு மீக்க * ளெல் லாங்
கூடியே தாமுண்ண வேண்டுமென் றேதினங்
கூடுத்த நறவு போலும்
பயில்சோர † ருக்குப் பிறந்திடத் தாம்பெற்ற
பாலனென் றுட்சருதி யே
பாராட்டி முத்தமிட் டன்பாய் வளர்த்திடும்
பண்பிலாப் புருடர் போலும்
துயிலின்றி நிதிகளைத் தேடியே யொருவர்பாற்
றுரட்டுத் தெறித் திடாம
றொகைபண்ணி வைத்திடுவர்கைக் கொண்டுபோக
சொந்தமா னவர்வேறு காண் [வரு
வயிரமொடு சூரனைச் சங்கார மேசெய்து
வானவர்க் குதவு தலைவா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (92)

இதுசேரி னிது பயன் படாதெனல்.

அழலுக்கு ளேவிட்ட நெய்யும் பெருக்கான
வாற்றிற் கரைத்த புளியு
மரிதான கமரிற் கவிழ்த்திட்ட பாலும் வரு
மலகைகட் கிடுபூசையும்
சுழல்பெருங் காற்றினில் வெடித்த பஞ்சும்மணற்
சொரிநீறும் பனிநீரு நீள்
சொல்லரிய காட்டுக் கெறித்த நிலவுங்கடல்
சுழிக்குளே விடு கப்பலும்
விழலுக் கிறைத்திட்ட தண்ணீரு முகமாய

* ஈக்கள்-தேன் வண்டுகள். † சோரர்-கள்ளபுருஷர்.



வேசைக் களித்த பொருளும்
வீணருக் கேசெய்த நன்றியும் பலனில்லை
விருதாவி தென்பர் கண்டாய்
மழலைப் பசுங்கிள்ளை முன்கைமலை மங்கைதரு
வண்ணக் குழந்தை முருகா
மயிலேறி விளையாடு குகனேபுல வயனீடு
மலைமேவு குமரேசனே. (93)

கைவிடத்தகாதவர்.

அன்னைசுற் றங்களையு மற்றைநாண் முதலா
வடுத்துவரு பழையோரையு
மடுபகைவ ரிற்றப்பி வந்தவொரு வேந்தனையு
மன்பான பெரியோரையும
தன்னைநம்பி னரையு மேழையா னவரையுஞ்
சார்ந்தமறை யோர்தம்மை யுந்
தருணமிது வென்றுநல் லாபத்து வேளையிற்
சரணம் புகுந்தோரை யும்
நன்னயம தாகமுன் னுதவிசெய் தோரையு
நாளுந் தனக்குறுதி யாய்
நத்து சேவகனையுங் காப்பதல் லாதிங்கை
நழுவவிட லாகாது காண்
மன்னுயிரு மினிய செஞ் சேவலுஞ் செங்கைமலர்
வைத்த சரவண பூபனே
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (94)

தகாதசெயல்.

அண்டிவருஞ் சுற்றார் பசித்தங் கிருக்கவே
யன்னியர்க் குதவு வோரு
மாசுதபு பெரியோர்செய் நேசத்தை விட்டுப்பி
னற்பரை யடுத்த பேருங்
கொண்டவொரு மனையாளிருக்கப் பரத்தையைக்
கொண்டாடி மருவு வோரும்
கூறுசற் பாத்திர மிருக்கமிகு தானமது
குணமிலார்க் கீய்ந்த பேரும்

சண்டவெரு புதியோரை நம்பியே பழயரைக்
கைவிட் டிருந்த பேருஞ்
சரிவாலை விட்டுநரி வால்பற்றி நதிநீர்
கடக்கின்ற மரியாதை காண்
வண்டடர் கடப்பமலர் மாலிகா பரணமணி
மார்பனே யருளாளனே
மயிலேறி விளையாடு குகனே புல்வயநீடு
மலைமேவு குமரேசனே. (95)

நல்லோர் முறைமை.

கூடியே சோதரர்கள் வாழ்தலா லுந்தகு
குழந்தைபல பெறுத லாலுங்
குணமாக வேபிச்சை யிட்டுண்கையா லுங்
கொடும்பிதிர்க் கிடுத லாலுந்
தேடியே தெய்வங்க ளுக்கீத லாலுந்
தியாகங் கொடுதத லாலுஞ்
சிறியோர்கள் செய்திடும் பிழையைப்பொறுத்துச்
சினத்தைத் தவிர்த்த லாலும்
நாடியே தாழ்வாய் வணங்கிடுத லாலுமிக
நல் வார்த்தை சொல்ல லாலு
நன்மையே தருமலாற் றாழ்ச்சிகள் வராவிவை
நல்லோர்கள் செயு முறைமை காண்
வாடிமன நொந்துதமிழ் சொன்னநக் கீரன்முன்
வந்துதவி செய்த முருகா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (96)

அடைக்கலங்காத்தல்.

அஞ்சலென நாயினிட றருமன் சுமந்துமுன்
னாற்றைக் கடந்து வித்தா
னடைக்கல மெனுங்கபற் காகநெடு மாலுட
னருச்சுனன் சமர்புரிந் தான்
தஞ்சமென வந்திடு புறவுக்கு முன்சிபி
சரீரந் தனைக் கொடுத்தான்



தடமலைச் சிறகரிந் தவனைமுன் காக்கத்
ததீசிமுது கென்பளித் தான்
இன்சொலுட னேபூத தயவுடைய ராயினோ
ரெவருக்கு மாபத்திலே
யினியதஞ் சிவனை விடுத்தாகி லுங்காத்
திரங்கி ரக்ஷிப்ப ரன்றோ
வஞ்சகிர வுஞ்சமொடு தாருகன் சிங்கமுகன்
வளர்சூர னுடல் கீண்ட வா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (97)

யோக்கியா யோக்கியம்.

பாலினொடு தேன்வந்து சேரில் ருசியதிகமாம்
பருகநீர் சேரி லென்னும்
பவளத்தி னிடைமுத்தை வைத்திடிற் சோபிதம
படிகமணி சேர்க்கி லென்னும்
மேலினிய மன்னர்பால யானைசேர் வதுகனதை
மேஷமது சேரி லென்னும்
மிக்கான தங்கத்தி னவமணி யுறிற்பெருமை
வெண்கல் லழுத்தி லென்னும்
வாலிப மினர்களுட னிளையோர்கள் சேரினலம்
வளைகிழவர் சேரி லென்னும்
மருவுநல் லோரிடம் பெரியோர் வரிற்பிரியம
வருகபவர் சேரி லென்னும்
மாலிகை தரித்தமணி மார்பனே தெய்வானை
வள்ளிக்கு வாய்த்த கணவா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (98)

பெரியோ ரியல்பு.

அன்னதானஞ் செய்தல் பெரியோர் சொல்வழி நிற்ற
லாபத்தின் வந்த பேருக்
கபயங் கொடுத்திடுத னல்லினஞ் சேர்ந்திடுத
லாசிரியன் வழிநின்றவன்

சொன்னமொழி தவறாது செய்திடுதல் தாய்தந்தை
துணையடி யருச்சனை செயச்
சோபமில்லாமலுயிர் போகினும்வாய்மைமொழி
தொல்புவியி னுட்டி யிடுதல்
மன்னரைச் சேர்ந்தொழுகல் கற்புடையமனைவியொடு
வைகினுந் தாமரையிலே
மருவுநீ ரெனவுறுத லிவையெலா மேதவர்த
மாண்பெண் ணுரைப்ப ரன்றோ
வன்னமயின் மேலுவர்ந் திவ்வுலகையொருநொடியில்
வலமாக வந்த முருகா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (99)

நூலின் பயன்.

வன்னமயி லேறிவரு வேலாயுதக்கடவுண்
மலைமே லுகந்த முருகன்
வள்ளிக கொடிக்கினிய வேங்கைமர மாகினோனை
வானவர்கள் சேனு பதி
கன்னன் மொழியுமைபா டிருப்புதல்வனரன்மகன்
கங்கைபெற் றநன் புத்திரன்
கணபதிக் கிளையவொரு மெய்ஞ்ஞானதேசிகக்
கடவுளா வினன்குடியி னுன
பன்னரிய புலவயலில் வாலகுமரேசர்மேற்
பரிந்துகுரு பாத தாசன்
பாங்கான தமிழாசிரிய விருத்தத்தி னலை
பாடலொரு நூறு நாடி
நன்னயம தாகப் படித்தபேர் கேட்டபேர்
நாடொறுங் கற்ற பேர்கள்
ஞானயோ கம்பெறுவா பதவியா வும்பெறுவர்
நன்முத்தி யும் பெறுவரே. (100)

குமரேசசதகம்-முற்றிற்று.